Lawrence, J. J.
Ind L 4800, 1
Bx

நன்மரணத்தைக்குறித்தது.

FAREWELL ADVICE

TO THE

AMERICAN MISSION CHURCH

AT

DINDIGUL.

BY THE REV. J. J. LAWRENCE, M. A.
PASTOR.

MADRAS:
PRINTED BY P. R. HUNT, AMERICAN MISSION PRESS.
1846.

நன்மரணத்தைக்குறித்தது.

FAREWELL ADVICE

TO THE

AMERICAN MISSION CHURCH

AT

DINDIGUL.

BY THE REV. J. J. LAWRENCE, M. A.
PASTOR.

MADRAS:
PRINTED BY P. R. HUNT, AMERICAN MISSION PRESS.
1846.

1874, Aug. 18.
Gift of
Saml A. Green, M.D.
of Boston.
(H. U. 1851.)

முகவுரை.

திண்டுக்கல்லில் இருக்கும் அமேரிக்கன் மிசியோனைச்சேர்ந்த சபையார் யாவருக்கும், அவர்கள் போதகரும், விசாரணைக்குருவுமாய் இருந்த, இலாரன்ஸ் ஐயர் எழுதிய மினவுதலான மறு உத்தரவு என்னவென்றால்;

நாம் சமுசாரத்தோடே நம்முடைய பிள்ளைகளைச்சீமைக்குக்கோண்டு போகிறதாக நீங்கள் அறிந்து, மிகுந்த பட்சமாய் ஆறுதலான விடுதல் காகிதத்தை மனோச்சாகமாய் நமக்கு எழுதிக்கோடுத்திருக்கிறபடியினாலே, நீங்கள் கிறிஸ்துவினிமித்தம் நம்மிடத்தில் கூருகிற அன்பைக் காட்டியிருக்கிறீர்கள்.

இதற்குப்பதில் நாம் உங்களுக்கு என்ன சேய்வோம் என்று ஆலோசித்து இருக்கும்போது, உங்களுக்கு நெடுநாள் பிரயோசனமாய் இருக்கும்படிக்கு, இந்தச்சிறிய புத்தகத்தைச்சேய்து, நாம் இந்த ஆசியா தேசத்தில் வந்த நாள் முதற்கோண்டு, இதுவரையில் பண்ணின பிரசங்கங்களினால் வரும் ஆத்தும இலாபத்தை நீங்கள் விட்டுவிடாதபடிக்கு எச்சரிப்பாக, சில நியாயங்களைச்சோல்லத்துணிந்தோம். எது நன்றாய் முடிகின்றதோ, அதுவெல்லாம் நலம் என்ற ஒரு பழமோழிப்படி, நீங்கள் நல்ல முடிவுபேறவேண்டும் என்று விரும்பி, இங்கிலீஷ் போதகராகிய, உவில்லியம் ஜே என்பவரால் உறுதியான எழுப்புதலாய்ப்பகர்கின்ற சில வசனங்களை நாம் தமிழ்ப்பாஷையில் திருப்பி, அச்சிலே பதிப்பித்து அனுப்பியிருக்கிறோம். நீங்கள் இதை நன்றாய் வாசித்து, கவனித்து, இதின் பிரகாரமாக நடப்பீர்களாகில், சீவகிரீடத்தை நம்முடைய நீதியுள்ள நியாயாதிபதியும், அன்புள்ள இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்துவினிடத்தில் பேறுவீர்கள்.

நன்மரணத்தைக்குறித்தது.

"நீ யுத்தமனை நோக்கிச்சேம்மையானவனைப்பார்த்திரு."

சங்கீ. ௩௭: ௩௭.

ஒரு கிறிஸ்தவன் எவ்வளவு சமாதானமாய்ச்சாகலாம் என்று அரிசனேன்னப்பட்ட சாஸ்திரி ஒரு பிரபுவை நோக்கிச்சோன்ஞர். அவர் சோன்ன இந்த வசனம் முக்கியமானதேன்று எல்லாராலும் அங்கிகரிக்கப்பட்டு வருகின்றது. "நீ உத்தமனை நோக்கிச்சேம்மையானவனைப்பார்த்திரு. ஏனேனில், அவனுடைய முடிவு சமாதானமாய்" இருக்கின்றது.

துர்ச்சனரே! வராமற் போங்கள். அல்லவேன்ருல், பயத்தோடே கிட்டிச்சேருங்கள். ஏனேனில், இவ்விடத்திலே அவன் இருக்கிற நிலைமையாய், காரியத்தைத்தேளிவாய்த்தேரிவிக்கிறதுண்டு. இரண்டகம், பித்தலாட்டம் என்கிற வேசி, இங்கே தன் முகத்தை மறைத்து, வேறே முகத்தைக்காட்டுகிறதில்லை. காணப்படுகிறவிதமும், இருக்கிற விதமும் ஒன்றுதான். சாகிறவனைப் பார்க்குமிடத்து அவன் பரகதியைப்பெற்றுக்கோள்வதையும் அந்நேரத்திலே பார்க்கிருேம். பரம எசமாஞகிய இயேசுக்கிறிஸ்துநாதர் கடைசிநேரமட்டும், அல்லது அவன் மரணம் என்கிற நதியைக்கடக்கிற மட்டும் காத்திராமல், அதற்குமுன் தமது ஆசீர்வாதத்தை அவனுக்குக்கட்டளையிட்டு,அவன் தம்முடையவன் என்கிறதை மற்றவர்களுக்கு ரூபிகரிக்கிருர். "நீ உத்தமனை நோக்கிச்சேம்மையானவனைப்பார்த்திரு. ஏனேனில், அம்மனிதனுடைய பிற்காரியம் சமாதானம்." இதைப்பற்றி மூன்று நியாயங்களைச்சோல்லுவோம்.

முதலாவது, அவனுடைய நடக்கை. அவன் உத்தமமானவன் என்று சோல்லப்பட்டிருக்கிருன். ஒருவன் உத்தமனுய் இருக்கிறது மிகுந்த வருத்தம் என்று நினைக்க வேண்டுவதில்லை. ஒருவன் மாசற்றவனுய் இருக்கிறது கூடாத காரியமாய் இருந்தாலும், கர்த்தருடைய கடாட்சத்தினுலே உத்தமனுய் இருக்கலாம். சங்கீ.

௩உ: க, உ. "எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டு, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான். எவன்மேற் கர்த்தர் அவன் அக்கிரமத்தைச்சுமத்தாதிருக்கிறரோ, எவனுடைய ஆவியில் கபடம் இல்லாதிருக்கிறதோ, அந்த மனுஷன் பாக்கியவான்." இதோ, அவர் தம்முடைய ஊழியக்காரரிடத்தில் நம்பிக்கை வைக்கிறதில்லை. தம்முடைய தூதர்களிடத்திலும், அவமதி உண்டேன்று சாற்றுகிறர். எவனொருவனும் இவ்வுலகத்தில் இருக்கையில், எந்தப்பாவங்களில் நின்றும், தப்பிதங்களில் நின்றும் நீக்கப்பட்டு இருக்கிறதைக்காணோம். உலகத்தில் உயிருள்ளவர்களில் பாவம் செய்யாதவர் ஒருவரும் இல்லை. நாம் எல்லாரும் அநேக காரியங்களில் இடறிப்போகிறவர்களாய் இருக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இரட்சகர் அன்றன்றுள்ள போசனத்துக்காக மாத்திரம் அல்ல. தினந்தோறும் நம்முடைய கடன்களை மன்னிக்கும்படியாக, சேபம்பண்ணவும் கற்பித்திருக்கிறர்.

கிறிஸ்தவனானவன் இனிமேல் நிறைவுள்ளவனாய் இருப்பான். ஆனாலும், கிறிஸ்துவோடே ஐக்கப்பட்டு இருக்கிறதால், இப்பொழுதே நிறைவுள்ளவனாய் இருக்கிறான். கிறிஸ்தவனானவன் உத்தமமானவன் என்று சொல்லப்பட்டு இருக்கிறதினாலே, இந்நேரத்திலும் அவனுக்கு அடுத்தவைகளைக்காட்டுகின்றது. இப்படியே இந்த முகவுரை வசனத்தில் அவன் உத்தமன் என்று சொல்லப்பட்டு இருக்கிறதுமாத்திரம் அல்ல. சேம்மையானவன் என்றும் சொல்லப்பட்டு இருக்கிறன். சேம்மை என்கிறது உத்தமம் என்பதைக்காட்டுகின்றது. ஏனென்றால், உத்தமமானவன் சேம்மை உள்ளவன்தான். அவன் தன் ஆத்துமாவுக்கடுத்த காரியங்களிலும் சேம்மையானவனாய் இருப்பான். பராபரனுக்குச்சேலுத்தவேண்டிய கடமைகளிலும் சேம்மையானவனாய் இருப்பான். பிறருக்குச்சேய்ய வேண்டிய நன்மைகளிலேயும் சேம்மையானவனாய் இருப்பான். அவனுடைய புகழ்ச்சி என்னவேன்றால், அவன் உலகத்திலே கபடம் இல்லாமல்,திவ்விய உண்மையோடும்,மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே அல்ல. பராபரனுடைய கிருபையோடும் சஞ்சரித்தான் என்று அவனுடைய மன

து அவனுக்குச்சாட்சி சொல்லுகின்றது. இதுவே அவனுடைய புகழ்ச்சி.

இரண்டாவது, இந்த உத்தமன் இடத்தில் கவனிக்க வேண்டிய காரியங்கள் என்னவென்ருல், அவனுக்கு உண்டானவை யெல்லாவற்றையும் கவனிப்பது தகுந்ததுதான். அவனுடைய பிறப்பு, அவனுடைய நடக்கை, அவனுடைய சீர் முதலானவைகளும் கவனிக்கத்தக்கவைதான். ஆனாலும், இவ்விடத்தில் அவனுடைய முடிவைக்கவனிப்போமாக. இங்கே அவன் சாவைப் பார்க்கிறோம். "நீ உத்தமனை நோக்கிச்செம்மையானவனைப்பார்த்திரு. ஏனெனில், அம்மனிதனுடைய பிற்காரியம் சமாதானம்."

மூன்றுவது, அவனுடைய முடிவைக்குறித்துச்சொல்லிய சாட்சியைக்கவனிப்போமாக. அந்தச்சாட்சி சமாதானம். சமாதானமென்ருல், இருவருக்கு உண்டாகிய பகை நீங்கி, ஒப்புரவாகிறது சமாதானம் என்று, இவ்விடத்தில் கருத்துக்கொள்வது போதாது. கர்த்தரால் உண்டாகும் சமாதானம், சவுக்கியம், பாக்கியம் என்று அருத்தமாகிறது. இப்படியே எருசலேமின் சமாதானத்துக்காக விண்ணப்பம்பண்ணுங்கள் என்று கற்பிக்கப்பட்டு இருக்கிறோம். இதனோடே இயோசேப்புப்பார்வோனோடே கர்த்தர் உமக்குச்சமாதானமான உத்தரவைக்கொடுப்பார் என்றுன். அர்த்தசஷ்டா என்னும் இராசன் தான் எழுதிய நிருபத்தின் முகவுரையில், இப்படியே சமாதானம் என்று எழுதுகிறுன். இப்படியே சீஷர்கள் ஒரு வீட்டுக்குட்பிரவேசிக்கும்போழுது, இந்த வீட்டுக்குச்சமாதானம் என்று சொல்லி, பிரவேசித்தார்கள் அல்லவோ! மேலும், சிமியோன் என்பவன் குழந்தையாகிய இயேசுவைத்தன் கையில் ஏந்திக்கோண்டு, கர்த்தரை ஸ்தோத்திரித்துச்சொன்னது என்னவென்ருல், இப்பொழுது உமது அடியானை உம்முடைய வார்த்தையின்படி சமாதானத்துடனே அனுப்பிவிடுகிறீர் என்றுன். இது எப்படியாயிற்றென்ருல், தேவரீர் என் விருப்பத்தை நிறைவேற்றி, என் பாக்கியத்தைப்பெருகச்செய்து, உம்முடைய தயையினுலும், ஆசீர்வாதங்களினுலும் என்னை நிரப்பினீர் என்று, சொன்னுற்போல் ஆயிற்று. இவ்விதமாக உத்தமனுடைய சீர் நிருவாகம் இருக்கிற

படியால், வாக்கியத்தில் "நீ உத்தமனை நோக்கிச்செம்மை யானவனைப்பார்த்திரு. ஏனெனில், அம்மனிதனுடைய பிற்காரியம் சமாதானம்" என்று சொல்லப்பட்டது சத்தியம் அல்லவோ? அதைப்பற்றிக்கிறிஸ்தவன் தனது மரணத்தில் அடையப்போகிற நாலுவிதமான காரியங்களைப்பற்றிச்சிந்தனை செய்வோமாக.

I. இப்பொழுது அவனுக்கு நேரிடுகிறது சந்தோஷமான காரியம் அல்ல.

II. அவன் அடையப்போகிற மரணம் அவனுக்கு இலகுவும், சந்தோஷமுடையதுமாய் இருக்கிறதும் அன்றி, மற்றவர்கள் அதிசயிக்கத்தக்கதுமாய் இருக்கின்றது.

III. கிறிஸ்தவனுடைய சாவு மற்றவர்களுக்கு மிகவும் முக்கியமான பிரயோசனங்களை உண்டுபண்ணுகிறதாய் இருக்கின்றது.

IV. அது முடிவிலே மிகுந்த சவுக்கியமும், மகிமையுமுள்ளதாய் இருக்கின்றது.

I. இப்பொழுது அவனுக்கு நேரிடுகிறது சந்தோஷமான காரியம் அல்ல. சிலர் அதைக்கவனிக்கும்பொழுது, அதற்குப்பயப்படாமல் அமைதலோடும், சந்தோஷத்தோடும் காத்துக்கொண்டு இருப்பார்கள். அதைத் தங்களுக்கு விடுதலையாக்குதல் என்றும், செயம் என்றும், வெற்றியென்றும் எண்ணிக்கொள்ளுவார்கள். இவர்கள் தங்களைக்குறித்துச்சொல்லுகிறது என்னவென்றால், இப்பொழுது தங்களுக்கு உண்டாயிருக்கிற உபத்திரவங்களும், துன்பங்களும் நீங்கி, கோணலானது சீர் திருத்தப்படும் என்றும், அறியப்படாதவைகள் அறியப்படும் என்றும், குறைவுள்ளவைகள் நிறைவுள்ளவைகளாகும் என்றும் எண்ணிக்கொள்ளுவார்கள். வயித்தியனாகிய கவுச்சி என்பவர் இதைக்குறித்துச்சொல்லியது என்னவெனில், நான் இனி ஆரும் திரும்பக்கூடாத வழியே போகிறேன் என்கிறார். இதனோடே அவர் எப்பொழுதும் சொல்ல வழக்கமுற்றிருந்த ஒரு மொழி என்னவென்றால்; இவ்வுலகத்தில் எனக்கு இரண்டு சிநேகிதர் உண்டு. அவர்களில் ஒரு சிநேகிதர் இயேசுவானவர் என்றும், மற்றொரு சிநேகிதன் மரணம் என்றும் சொல்லுவார். இப்படிப்பட்ட கிறிஸ்தவனை ஒரு பள்ளிக்கூடத்தில் படிக்

கிறவனுக்கு ஒப்பிடலாம். படிப்பிக்கப்படுகிறவன் தன் படிப்பை விட்டு விடுகிறதும் இல்லை. தன் வீட்டை வெறுக்கிறதும் இல்லை. இப்பொழுது அவனுக்கு உண்டாகிய சீர் படிப்புக்கு ஏற்றதுமாத்திரம் அல்ல, காக்கப்படுதலுக்கும், நீக்கப்படுதலுக்கும் ஏற்றதாயும் இருக்கின்றது. படிக்கிறவன் ஓடிப்போகிறது இல்லை. படிக்கும் காலத்தில் திரும்பவும் வீட்டுக்கு வருவான் என்றும் எண்ணுகிறன். மேலும், தன்னை அழைக்கும் படிக்கு அனுப்பப்படும் எந்த ஊழியக்காரனையும் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளுவான். அந்த ஊழியக்காரன் பொல்லாதவனுய் இருந்தாலும், அவன் தன்னைத் தகப்பன் வீட்டுக்குக்கூட்டிப்போகிறவனுய் இருக்கிறபடியினுலே, அதிக சந்தோஷம் உள்ளவனுய் அவனுடனே போவான். இப்படிப்பட்ட சந்தோஷம், மரண காலத்திலே எல்லா மனிதருக்கும் உண்டாகிறது அல்ல. தாவீது, "நான் மரண நிழலாகிய பள்ளத்தாக்கிலே நடந்தாலும், பொல்லாங்குக்குப்பயப்படேன்" என்று சொல்லும்பொழுது, அந்தத்தயிரியம் விரும்பப்படத்தக்கதாய் இருக்கும் என்று காட்டுகிருர்.

குணப்படாதவர்களுக்கு நாம் சொல்லுகிறதேன்னவென்றல்; மரணமானது, எல்லாப்பயங்கரங்களுக்கும் மேலான அதிகாரியாய் இருக்கின்றது. அதைப்பற்றி அவர்களுக்கு உண்டாகும் பயம் எல்லாம் சொல்லாதிருந்தாலும், அந்தப்பயம் அவர்களை நொறுக்குகின்றது. அல்லது வாதிக்கின்றது. மரணம் வரும் என்கிற அவர்களுடைய அவபத்தியானது என்னவென்றல்; பல்லி கத்துகிறதினுலேயும், காக்கை, பருந்து, குறுக்கே பறந்து போகிறதினுலேயும், நாயை, பூனையைக்காணுகிறதினுலேயும், இன்னும் பற்பல துர்ச்சகுனங்கள் தங்களுக்கு நேரிடுகிறதினுலேயும் பயந்திருக்கிருர்கள். தங்களுக்குச் சாவு வருவிக்கிற ஒரு ஏதுவுண்டானல், அந்த ஏதுவை நீக்குகிறதற்கு எவ்வளவு பிரயாசப்படுவார்கள்? அது வரும் என்கிற ஒரு குறிப்பு, அல்லது ஒரு அடையாளம் தங்களுக்குக்காணப்பட்டால், அதை விலக்குகிறதற்கு எந்த வருத்தங்களையும் சகித்து, மிகுந்த கவலைப்பட்டுத் திரிவார்கள். பிராஞ்சு தேசத்தில் இருந்த ஒரு இராசன், தம்முடைய காலத்தில் மரணம் என்கிற அல்லது சாவு

என்கிற செய்தி, தாம் இருக்கிற இடத்தில் சொல்லவும், பேசவும் கூடாது என்று கற்பித்து இருந்தார். உருசியா தேசத்தின் இராசஸ்திரீயாகிய கத்தரீன் என்பவள் தான் இருக்கிற பட்டணத்தில் மரித்தவர்களை அடக்கம்பண் ணக்கொண்டுபோகிறவர்கள் தன்னுடைய அரண்மனை வீதி வழியாகக்கொண்டு வரக்கூடாது என்றும், செத்த சவங்களைப்பகலிலே அடக்கம்பண்ணுமல், இராக்காலத் திலே இரகசியமான விதமாய் அடக்கம்பண்ண வேண் டும் என்றும் கட்டளைகொடுத்து இருந்தாள். அநேகர் இறந்துபோன தங்கள் இனத்தாரைப்பற்றிப்பேசிக்கொள் ளாமலும்,சொல்லிக்கொள்ளாமலும் இருப்பார்கள். ஏன் அப்படி இருக்கிறார்கள்? அவர்களைச்சிநேகிக்கிறதினுலே யோ? அல்ல. சாவு என்கிற பயத்தினுலேயே அப் படிச்செய்கிருர்கள். அநேகர் சாவு என்கிற நினைவு எப் பொழுதும் தங்கள் மனதில் வராதபடிக்குப்பிரயாசப் பட்டு வருகிருர்கள். ஆகையால், அப்போஸ்தலனுகிய பவுல் சொல்லுகிறது, "சீவகாலமளவும் மரணத்திற் குப்பயந்து அடிமையாய் இருக்கிருர்கள்." அந்தப்பயத் துக்கு அடிமைப்பட்டவர்களாய் இராதிருந்தாலும், அந் தப்பயத்துக்கு ஏதுவானவர்களாய் இருந்தார்கள். அ தைப்பற்றி ஒரு புஸ்தகத்தில் வாசிக்கும்பொழுது, கேட் கும்பொழுது, ஒரு சவத்தை, ஒரு கல்லறையைக்காணும் பொழுது அல்லது அவர்களுக்கு ஒரு மோசம் ஒரு வியா தி வந்தபொழுது, அதைப்பற்றி மிகுந்த பயத்தோடு ஆலோசிப்பார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு உண் டாகும் நிர்ப்பாக்கியத்தை எளிதாகக்கண்டுகொள்ள லாம். ஏனென்ருல் தாங்கள் வெறுக்கிறதும், பயப்படு கிறதுமான காரியத்தை ஆலோசியாதபடிக்குப்பிரயாசப் படுவது எவ்வளவு! அதை அவர்கள் ஆலோசிக்கும் படியாக நாள்தோறும் சம்பவிப்பவைகள் அவர்களுக்கு நேரிடுமே.

கிறிஸ்தவனே நேரிட்டிருக்கிறவைகளைப்பற்றி, பயப் படவேண்டியது என்ன? சாவு செயிக்கப்பட்டது அல்ல வோ? அது அவனைக்கொத்துமோ? பாம்பு சீறினுலும் கடிக்கிறதில்லை. அதின் விஷப்பல் எங்கள் கண்கள் முன்னே பிடுங்கப்பட்டு இருக்கிறதைக்கண்டு இருந்தா லும், அதை எங்கள் மடியில் வைத்துக்கொண்டிருக்

கையில் பயம் உண்டாகும். ஆகிலும்,அது எங்களுக்கு ஒன்றும் செய்யக்கூடாது. கிறிஸ்தவர்களில் அநேகருடைய பயங்கரமான திகில்கள் சாகிற நேரத்தில் தான் நீங்குகிறதுமாய், நிலைக்கிறதுமாய் இருக்கின்றது.

சாகிறதற்குப்பயப்படுகிறதே எங்கள் சுபாவத்துக்கு அடுத்ததாய் இருப்பதால், அதற்குப்பயப்படுகிறது பாவம் உள்ளதல்ல. தன்னை மரணத்துக்குக்காத்தல் மோசத்திற்கும், திகிலுக்கும் தன்னை விலக்கிக்காக்கிறதாய் இருக்கிறது. எந்த மிருகத்துக்கும் சாவைக்குறித்துப்பயம் உண்டு. மிருகங்களுக்குப்பயம் உண்டானாலும் ஆலோசனையைப்பற்றி அல்ல. மனிதருக்குப்பயம் உண்டாகிறது இனிச்சம்பவிக்கப்போகிற ஆலோசனையைக்குறித்து உண்டாகிறபடியால், அந்தப்பயம் அதிகப்படுகிறது. வீடு, வாசல், மனைவி, பிள்ளைகள், அவன் நடந்த செய்கைகளைக்குறித்து நினைவுகொள்வதினால், அந்தப்பயம் அதிகப்படுகிறது. பரதீசின் தோட்டத்தில் இருந்த ஆதாமும், ஏவாளும் இந்தப்பயங்கொண்டார்கள். நீங்கள் தின்கிற நாளிலே சாவீர்கள் என்கிறபயமுறுத்தலும், அவர்களுக்கு அவ்விடத்தில் சொல்லப்பட்டு இருந்தது. இநதப்பயமுறுத்தல் ஒரு முக்கியமான தீமையென்று எண்ணிக்கொள்ளாதிருந்தால், அது அவர்களுக்குப்பயமுறுத்தலாய் இருக்குமா? பரிசுத்த ஆவியின் அச்சாரத்தைப்பெற்றுக்கொண்டிருந்த அப்போஸ்தலரும் சொல்லுகிறதாவது; உ கொரி. ரு: ௩, ௪. “நாம் இந்த வீட்டிலே தவிக்கிறோம். இந்தக்கூடாரத்தில் இருக்கையில், நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம். ஆனதால், நாங்கள் இதைப் பேர்க்க விரும்பாமல், சீவனாலே மரணம் விழுங்கப் படத்தக்கதாக உடனே அதைத்தரித்துக்கொள்ள விரும்புகிறோம்” என்பதே. இப்படியிருக்க மற்றக்கிறிஸ்தவர்களும், சாவுக்குப்பயந்திருக்கிறது அதிசயமோ? அதைப் பற்றிக்கவலைப்படுவதற்கு முகாந்தரம் உண்டு. அது புதியகாரியந்தான். யோசுவா யூதருக்குச்சொன்னதுபோல நீங்கள் முன் போகாத வழியிலே, இப்பொழுது போக வேண்டும். அவர்கள் முன்னே அடைந்த அறிவு இப்பொழுது அவர்களுக்கு உதவிசெய்கிறது இல்லை. மற்றவர்களுடைய அறிவினாலும் பிரயோசனம் இல்லை. சேத்துப்போனவன் வந்து சொல்லவும், அந்த அறிவை

அறிவிக்கவுங் கூடுமோ? அது சம்பவித்ததோ? அவர்கள் நெடுநாளாகப்பழகிக்கொண்டிருந்த இடங்களை விட்டுவிடவேணும் என்றும், அழுதுகொண்டு இருக்கிற சிநேகிதரை விட்டு விடுகிறது என்றும், நோவுகளும், பெருமூச்சும், மரண அவஸ்தையும், சரீரம் அழிந்துபோகிறதும், அதைப்பிரேதக்குழியிலே தனியே வைக்கிறதும், அது புழுக்களுக்கு இரையாக மாறப்படுவதும், அவர்கள் பரிசுத்தருடைய சமுகத்தில் உடனே போய்ச்சேருகிறதும், அதற்குப்பின் நியாயந்தீர்க்குதலும், பராபரன் தங்களை அங்கிகரிப்பாரோ என்கிற சந்தேகங்களும், பின்னாலே வருங் காரியம் எவையென்கிற சந்தேகங்களும், இவைகளை யெல்லாம் நாம் சிந்தித்துக்கொண்டிருக்க, சாகுங்காலத்திலே முக்கியமாய் எங்களுக்கு நம்பிக்கையும், தயிரியமும், புதிய இருதயமும் வேண்டும் என்று அறிகிறோம்.

வேறுசிலர் தங்கள் அவபத்தியினாலும், வீணான நியாயங்களைச்சொல்வதினாலும், பற்பல காரியங்களைப்பேசி, அந்த மரண பயத்தை நீக்கிவிடுகிறார்கள். அவர்களுக்குச்சாகுமட்டும், ஒரு விதமான அமைதலும் உண்டு. ஆம் சாகும் காலத்திலுந்தானே சிலர் விளையாடுவார்கள். யூம் என்னும் துரையும் மரணத்தைக்குறித்துப்பயப்படாதவனைப்போல, எமதூதன் தன் தெப்பத்தை ஆயத்தம் பண்ணட்டும் என்று, மரண பயத்தை மறைத்துச் சொல்லுவான். சிலர் வீண்பத்தியினாலும், அவிசுவாசத்தினாலும், தங்களுக்கு நேரிட்டிருக்கிற மோசத்தை நீக்கிவிடாவிட்டாலும், மரண பயத்தைப்பலவித விளையாட்டினாலும், வெறிகொள்வதினாலும் நீக்கிவிடுவார்கள். ஒருவன் பாதாளத்தின் ஓரத்தில் நடக்கையில் அதில் விழுவேன் என்று தான் அறியாவிட்டாலும், அதினால் அவன் மோசமற்றிருக்கக்கூடுமோ? அவன் அறியாததினாலே சும்மா இருக்கிறான். அவன் அப்படிவிளையாடிச்சிரித்து விழுந்துபோகிறான். அப்படியே அக்கிரமக்காரரும் இருக்கிறார்கள். சங்கீ. எ௩: ச. "ஆகாதவர்கள் தங்கள் மரணமட்டும் இடுக்கண்கள் இல்லாமல், அவர்களுடைய பெலன் புஷ்டியாய் இருக்கின்றது." கிறிஸ்தவனோ தான் சாகவேணும் என்கிற எண்ணத்தைத்தன்னைவிட்டுத்தள்ளுகிறதில்லை. அதை நன்றாகக் கவனிக்கவேண்டும் என்றும், அதின் தன்மை ஏதென்

றும், அது எதற்கேதுவாய் இருக்கிறதென்றும், அதற்குப் பின் சம்பவிக்கப்போகிறவைகள் எவையென்றும் சிந்திப் பான். சிந்தித்துக்கொண்டு இருக்கையில், அதிக உ ணர்ச்சியும், மனக்கவலையும் இருந்தாலும், நன்றாய் முடி யும். ஆகையால், ஒரு கிறிஸ்தவனுக்கு மரண அவஸ் தையில் உணர்ச்சியும், கவலையும் உண்டாயிருக்கை யில் தன் தேவபத்தியும், விசுவாசமும் அவமாய்ப் போயிற்றென்று நினைக்கவேண்டியதில்லை. நீங்கள் கிறி ஸ்துநாதரைச்சிநேகிக்கிற சிநேகம் அற்றுப்போயிற்றென் று நினைக்கவேண்டாம். ஆ, நான் இயேசுவைச்சிநேகித் தால் அவருடனே இருக்கவும், அவருடைய வருகைக்கு ஆவலோடே காத்திருக்கவும், வாரும் இயேசுவே சீக்கிர மாய் வாருமென்று சொல்லவும் இருப்பேனென்று, ஏ மாந்து சொல்லவேண்டுவதில்லை. ஏனெனில், நீ அவரு டைய சாயலாய் இருக்க அவருடைய மகிமையை வி ரும்பி இருப்பதால், நீ அவரை நேசிக்கிறாய். நீ எப்போ ழுதும் அவருடனே இருக்கவும் விரும்புகிறாய். அ வன் அவரிடத்திற்குப்போகிறது சந்தோஷம். அதின் வழியின் வகை அவனுக்குப்பயமாய் இருக்கிறது. அப் படியே தூரதேசத்திற்குப்போய் இருக்கிறவனுக்கும் இ ருக்கும் தன் மனவியையும், வீட்டாரையும் நினைக்கும் பொழுது, அவர்களைப்பார்க்க விரும்புவான். ஆனால், அவன் கடக்கவேண்டிய சமுத்திரத்தைக்குறித்துப்பயப் படுவான். தான் பயப்பட்டாலும், அவர்கள்மேல் வைத்திருக்கிற அன்பைக்குறித்துச்சந்தேகப்படான்.— ஆனாலும், நீங்கள் விசுவாசிகளாய் இருப்பதினாலே, மரணத்துக்குப்பயப்படுபவைகளை விலக்கவேண்டுவது தான். இப்படிப்பட்ட தயிரியங்கள் உங்கள் மனதி லே இருக்கிறதற்கு எத்தினங்களும்போதுமே. நீங்கள் இப்பொழுது அநுபவித்திருக்கிற பயங்களையும், சாகுங்கா லத்திலே அநுபவிப்பீர்கள் என்று சொல்லவும் வேண்டு வதில்லை.

II. அவன் அடையப்போகிற மரணம் அவனுக்கு இலகுவும், சந்தோஷமும் உடையதுமாய் இருக்கிறது மன்றி, மற்றவர்கள் அதிசயிக்கத்தக்கதுமாய் இருக்கின் றது. ஏனெனில், நீதிமானுக்குத்தனது மரணத்தில் நம் பிக்கையுண்டு. சிலருக்கு அந்த நம்பிக்கை அதிகப்

படும். மற்றச்சிலருக்கு அந்த நம்பிக்கையோடே பயப் படுதலும் உண்டாகும். அந்தப்பயப்படுதலே நீக்குகிற தற்கு, அந்நேரத்திலே திராணியில்லாதேபோகும். சில ருக்குத்தங்கள் மனம் தேவனிடத்தில் சார்ந்து இருக்கி றபடியினுலே, அதிக அமைதலாய் இருக்கும். வேறு சிலருக்கு அதிக தயிரியமும், சந்தோஷமும் உண்டாயி ருக்கும். அவர்கள் பூரணமான நிறைவோடே மோட்ச இராச்சியத்தில் பிரவேசிப்பார்கள். வானங்கள் மட மடப்போடு ஒழிந்து, பூதியங்களும் எரிந்து கரைந்துபோ கையில், அவர்கள் மகிமையில் சந்தோஷப்படுவார்கள். அந்த இராச்சியத்தில் அவர்கள் உட்பிரவேசித்து ஆயிற் றேன்றதுபோலத்தங்கள் படுக்கையில் ஆர்ப்பரிக்கிறுர் கள். இப்படிப்பட்ட சோல்லப்படாத சந்தோஷமும், நிறைவுள்ள மகிமையும், பூரண சமாதானமும் அவனேத் தாங்கியிருக்கின்ற உறுதியான நம்பிக்கையும், மரண அவஸ்தையில் எல்லாருக்கும் உண்டேன்று, நாம் சோல் லுகிறதில்லே. ஆனுலும், எல்லாருக்கும் இவ்விதமாய் இருக்கலாம் என்று சோல்லுவோம். போதுவாக அவர் கள் உயிரோடு இருந்தகாலத்தில், அவர்களுக்கு ஆறுதல் உண்டாயிருந்தபோதிலும், மரணகாலத்தில் அவர்களுக் கு அதிக ஆறுதல் உண்டாயிருக்கிறதேன்று நாம் சோல்லு வோம். நாம் ஒப்பனேயாக விசுவாசியின் வீடு வேடித் து வேடித்து இடிகிறபோழுது, வேடிப்பின் வழியாய் அதிக வேளிச்சம் பிரவேசிக்கிறதேன்றும், மகிமையுள்ள மண்டலத்துக்குச்சமீபமாய்ச்சேருதல், அந்த மண்டலத் தின் மகிமையை அவனுக்குச்சேர்க்கப்படும் என்றும், தனக்கும், இம்மானுவேல் தேசத்திற்கும் ஓடுகிற நதி யின் ஓரமட்டும் வந்தபோது, அதற்கு அப்பாலிருக்கிற மேடுகளேப்பார்த்து, அதில் இருக்கிற கீதவாத்தியங்களேக் கேட்டு, அதில் நின்று காற்றுேடேவருகிற சுகந்த வாசனே யும் மோந்துகோள்ளுகிறுர்கள் என்றது. அலங்காரமா ன ஒப்பனேயாய் இருந்தாலும், அந்த ஒப்பனேயிலே தகுந்த போருள் உண்டாயிருக்கிறது. கிறிஸ்தவன் சா கும்போது, அவனுக்கு அதிக தயவு அளிக்கப்படுமேன் று நாலு நியாயங்களேக்கோண்டு காட்டலாம்.

க. வது. சகாயத்துக்கும், ஆறுதலுக்கும் ஏற்ற ஆறுத லே ஏற்றுக்கோள்வதற்கு, முழுமனதோடே தன் இரட்ச

கரிடத்தில் சார்ந்திருப்பான். சுகமாயிருக்கும் காலத்தி லே, நாம் செய்கிற புண்ணியத்தில் சார்வதற்கு நமக்கு ஏதுவுண்டு. அறிவீனத்தினுலேயோ, அறிவோடேயோ எப்படியும் விசுவாசிகளுக்கும் இந்தச்சோதனை இருப்ப தால், அவனுடைய நடக்கை எப்படி மாறப்படுகிறதோ, அப்படியே அவன் நம்பிக்கையும் தள்ளாடும். ஆனு லும், சாகுங்காலத்திலே இப்படிப்பட்ட மண்சுவர் நிற் காது. அவன் நம்பிக்கை அவன் கிரியையின்மேலே அஸ்திவாரப்படாதேன்று அந்நேரத்தில் விளங்கும். எப் படியாகிலும், அந்நேரத்தில் அவனுக்கு ஆறுதல் அவசர மாய் வேண்டும். அதை எவ்விடத்திலே கண்டு அடை வான். பின்னுகப்பார்த்தால் அவன் எல்லாராலேயும் நற்கீர்த்தியைத்தான் பெற்றிருக்கிறதாக அறிந்தால், அதி னுலே ஆறுதலை அடைவானு? தனக்குள்ளிருக்கிற தைப்பார்த்தால், தான் பாத்திரவான் என்று எண்ணி, ஆ றுதலை அடைவானு? தன்னை அபாத்திரன் என்று எண் ணி, தான் செய்த எல்லாச்செய்கையிலும் பாவம் உண் டேன்று கண்டறிகிறுன். என்னசெய்வான்? ஆரிடத் திற்போவான்? தான் இருக்கிற நிலைவரத்தோடே வே ருெருவரைப்பார்க்கத்தான்வேண்டும். ஆகையால், இ யேசுவே அவன் போக்கிசம்.

க. மிகுந்த பாவச்சேற்றிலே
அமிழ்ந்தவனுனேன்
விஸ்தார பூதலத்திலே
சகாயத்தைக்காணேன்.

உ. ஆ, கர்த்தரே என் நோவிலே
சகாயராயிரும்
தேய்வீக அன்பை நெஞ்சிலே
நிறுத்தி இரட்சியும்.

ந. அதே அன்புள்ள இயேசுவே
என் ஆவியிற் பயம்
நில்லாமல் விட்டுப்போகவே
பலத்த எத்தினம்.

௪. என் தேகமும் என் ஆவியும்
பிரியும் போதிலே
நான் உம்மைக்கண்டு என்றைக்கும்
சந்தோஷம் கொள்வேனே.

ஆகையால், அவிசுவாசத்தினுலே முன்னே வராத மனச்சமாதானம் இப்போழுது அநுபவிக்கப்பட்டிருக்கும்.

௨. தன்னுடைய நிலவரம் இன்னதென்று நிச்சயித்து அறியும்படிக்குப்புத்திசோல்லப்படும். முன்னே அவனுடைய நிலவரத்தை நன்ருகச்சோதித்துப்பார்த்திருப்பான். ஆனுலும், இப்போழுது அவனுக்கு உண்டான ஏவுதலும், சுறுசுறுப்பும் அப்போழுது தோன்றினதில்லை. இப்போழுதோ, அவன் அதைப்பின்னிட்டுப்பார்க்கலாம் என்று சோல்லுவதற்கு இடமில்லை. தனக்கும், பராபரனுக்கும் எவ்விதமாய் இருக்குமேன்று, இப்போழுதே நிச்சயமாகஆலோசிக்க வேண்டும். ஏனேன்ருல், இனிமேல் அவனுடைய நிலவரம் ஆற்றப்படாதவிதமாய் இருக்கும். அவன் சாகிறதற்கு ஏதுவாய் இருக்கும்போழுது, அவனுடைய நிலவரம் சவுக்கியம் அற்றதாய் இருந்தால், அதைச்சோதிக்கிறது அவனை அமைதல்படுத்தாமல் பயப்படுத்தும். ஆனுலும், அவனுடைய நிலவரஞ் சவுக்கியமானதுதான். அதைப்பற்றி அவனுக்குண்டான அறிவீனம் மனக்கலக்கத்தையும், சந்தேகத்தையும் கோடுக்கின்றது. இதற்கு அவன் விலக்கப்பட்டு, காரியம் இன்னவிதம் என்று உறுதியாக அறிந்தால், அவன் அவநம்பிக்கையாய் இராமல் உறுதியாய் இருப்பான். அவனுக்கு உண்டான பயம் அவனுக்கு உரியதல்ல. ஏனேன்ருல், அவனுடைய வீடு எவ்வளவு புயல் அடித்தாலும் அசைக்கப்படாத உறுதியுள்ளதாய் இருக்குமே. அதின் அஸ்திபாரம் இப்போழுது சோதிக்கிறதற்கு ஏவப்பட்டபடியால், அது அசைக்கப்படாத உறுதியும், பலமும் உள்ளதேன்று அறிந்து சந்தோஷப்படலாம்.

௩. வது. அவனுக்கு அந்நேரத்திலே விசேஷமான ஆறுதலும், உதவியும் வேண்டியிருப்பதால், கர்த்தர் தமது அருமையான குமாரனைப்போல மிகுதியாக அவனை

நேசிப்பார். அவனுக்குப்பராபரனுடைய தயவு வேண்டியதாய் இருக்கும்போழுது, அதிக விசேஷமாய்க்கொடுக்கப்படும் உபத்திரவ காலத்திலே, அவனுடனே கூட இருப்பேன் என்று சொல்லுகிறார். அவர் அவனை விட்டுவிடுவதும், விலக்குவதும் இல்லையென்று சொல்லியிருப்பதினாலே, அவர் எப்பொழுதும் அவனுடனே கூட இருக்கிறார். ஆனாலும், விசேஷமாய் அவனுடைய சாவிலும் இருப்பார். அவன் தன்னுடைய மரணப்படுக்கையிலே கால்முடங்கி, தன் முகத்தைச்சுவரோடே திருப்பிக்கொண்டு இருக்கும்பொழுதும், சாத்தான் நேரம் சமீபமாயிற்றென்று அறிந்து, அதிக உக்கிரத்தோடே வந்து இருக்கும்பொழுதும், எப்படிப்பட்ட நேரமாய் இருக்கும். ஆனால் அவன் கூப்பிடும்பொழுது, தான் நம்பியும், தோத்திரித்தும் வந்த தேவனானவர் சமீபமாய்ச்சேருவார். அவன் ஆத்துமாவின் காதிலும் அவர் இரகசியமாய்ப்பேசுவது என்னவென்றால, "நீ பயப்படாதே. ஏனெனில், நாம் உன்னுடனே இருக்கிறோம். திகையாதே. ஏனெனில், நாம் உன் பராபரன். நாம் உன்னைப்பலப்படுத்தி, உனக்குச்சகாயம் பண்ணுகிறவரும், உன்னை நமது நீதியின் வலதுகரத்தினாலே தாங்குகிறவருமாய் இருக்கிறோம்" என்பதே. கர்த்தர் இப்படியே அவன் ஆத்துமாவில் பேசியிருப்பதினாலே, அவன் "பின்னையார் எனக்குப்பரமண்டலங்களில் இருக்கிறார். உம்மோடே நான் இருக்கையில் பூமியில் எனக்கு வேறே விருப்பமில்லை. என் மாம்சமும், என் இருதயமும் மாளும்போது, பராபரன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும், என் பங்குமாய் இருக்கிறார்" என்பான்.

௪. வது. முன்னே அவன் ஏற்றுக்கொள்ளக்கூடாத வெளிப்படுதல்களை இப்பொழுது ஏற்றுக்கொள்ளுகிறான். எல்லாக்காரியங்களுக்கும் தகுந்தகாலம் ஒன்றுண்டு. கிரியை செய்யவேண்டிய காலத்துக்கு வேண்டிய கிருபையைத்தேவன் அளிப்பார். சாகவேண்டிய காலத்துக்குச்சாகிறதற்கு வேண்டிய கிருபையையும் அளிப்பார். விசுவாசி தான் செய்யவேண்டிய கடமைக்கும், தான் பெற்றுக்கொள்ளப்போகிற பலனுக்கும், தன்னுடைய நடக்கைக்கும், பயணமுடிவில் வரும் பாக்கியத்

துக்கும் எத்தினமாக்கப்படவேண்டும். நமக்குண்டாகும் நிலைவரமும், அலுவல்களும் பராபரனாலே நியமிக்கப்பட்டு இருக்கின்றன. நாம் அவைகளிலே இருக்குமட்டும் சுறுசுறுப்போடே நடந்துகொள்ளவேண்டும். நம்முடைய இனத்தாரையும், இலவுகீக அலுவல்களையும், சுகத்தையும், சீவனத்தையும் காத்துக்கொள்ளுதலையும் பார்க்கும்போழுது, அவைகளைக்கவனிக்கிறது நியாயந்தான். ஆனாலும், தேவன் தமக்குப்பிரியமுள்ளவர்களுக்குக்கொடுக்கிற அறிவும், ஆறுதலும் கொஞ்சம் அல்லாததால் அவை பூமண்டலத்தில் உண்டான சகலமாகிய சிற்றின்பங்களையும் இச்சிக்காமல், மேல்மண்டலத்தில் உண்டான பேரின்பங்களை இச்சிக்கிறதற்கு ஏதுவுண்டாகும். இதைப்பேதுருவிலே காண்கிறோம். நமது இரட்சகர் மறுரூபம் அடைந்து மோசேயும், எலியாவும் அங்கே காணப்பட்டிருக்கும்போழுது, பேதுரு அங்கே வாசம்பண்ணும்படிக்கு, குடில்களைக்கட்டவேண்டும் என்றிருந்தான். ஆனாலும், தான் சோன்னது தனக்குத்தேரியாதிருந்தான் என்று தேவ ஆவியானவர் சோல்லுகிறார். அவன் சோன்னபடி ஆகுமானால், அவன் பேண்சாதி, பிள்ளைகளுக்கு என்னவாய் இருக்கும். பேதுரு தனக்குண்டான பாவ சாந்தத்தினாலே இவைகளை மறந்துவிட்டான். ஆனாலும், நமக்கு இனத்தார் இருக்க நாம் அவர்களை விசாரிக்கிறதும், பராமரிக்கிறதும் நியாயந்தான். அப்படியிருக்கப்பூலோகத்திலே சாகும்போழுது பேண்சாதி, பிள்ளைகள், இனத்தார் முதலானவர்களை விட்டுச்சமாதானத்தோடே போகிறது நலமே. அந்நேரத்திலே சீவனிலே பிரியப்படாமல், நித்திய சீவனை அடைவதே நலமேன்று எண்ணி, மேலேவாவேன்கிற சத்தத்துக்குச்சேவிகோடுக்கிறதற்காக, மற்ற எல்லாச்சத்தங்களுக்கும் சேவிடனாய் இருக்கிறது விரும்பப்படத்தக்க காரியந்தான். இந்தக்கிருபையும் விசுவாசிகளுக்கு அளிக்கப்பட்டு இருக்கின்றது. சாவிலே நடுங்கிப் பயந்திருந்தவர்கள் மிகுந்த தயிரியமுள்ள வீரர்கள் ஆனார்கள். முன்னே அறிவீனத்தினாலே அடக்கப்பட மனதுள்ளவர்கள் பராபரனுடைய புத்திரரின் சுயாதீனத்திலே விடுதலையாக்கப்பட்டு இருப்பார்கள். ஊழியக்காரரும், அடிமைகளும் பாட்டைப்பாடி இருப்பார்கள்.

க. மரணத்தாலே செல்வமும்
அளவில்லாத மேன்மையும்
எனக்குண்டாம் அதனாலே நான்
மரிக்கும்போதே மோட்சவான்.

உ. அப்போது சேர்ந்த ஆத்துமம்
தூதர்களோடே பாக்கியம்
நிறைந்த பரதீசிலே
களிக்கும் என்றும் கர்த்தரே.

ங. அதனால் நல்லாறுதல் உண்டே
அக்கணம் எனதாவிக்கே
கர்த்தாவைக்காணும் மேன்மையும்
இன்பமும் பெற அருளும்.

ச. என் ஆவியில் அப்பரம
ஸ்தோத்திரத்தைக் கேட்கிற
நான் இந்த லோகத்தை இனி
இச்சித்துக்கொள்வதெப்படி.

ரு. அங்கே சேர்ந்தோரின் பாக்கியம்
மா உறுதி மா பத்திரம்
பரத்தின் நன்மை என்றைக்கும்
இருக்கும் இன்பம் தந்திடும்.

சா. விரும்பப்பட்ட சீவனே
என் ஆவி நாடும் செல்வமே
உம்மால் எப்போதும் பூரிப்பேன்
எப்போதும் அங்கே சேருவேன்.

ஆகையால், யாக்கோபின் வித்தாரே! பயப்படாதிருங்கள். உங்கள் தேவனாகிய பராபரன் இடத்திலே உங்களை ஸ்திரப்படுத்துங்கள். நான் கர்த்தருக்காகக்காத்திருக்கிறேன். என் ஆத்துமா அவருக்காகக்காத்திருக்கின்றது. அவருடைய வசனத்திலே நம்பிக்கைகொண்டு இருக்கிறேன் என்று சொல்லும்போழுது, வருங்காலத்தி

லே என்ன சம்பவிக்குமோவென்று, உங்கள் மனதிலே கலக்கப்படவேண்டுவதில்லை. நாளைக்காகக்கவலைப்படாதிருங்கள். நாளைக்காக நாளைக்குத்தானே கவலைகள் உண்டாகும். ஒவ்வொரு நாளைக்கு அதினதின் வருத்தம் போதுமே. கிறிஸ்தவனுக்கு அதினதின் நன்மையும் போதுமானதே. நிகழ்காலத்துக்கு உன்னுடைய கடமை அடுத்ததாய் இருக்கும். நீ தேடவேண்டிய கிருபை அவசரமான காலத்துக்கு வேண்டிய கிருபைதான். கிரியை செய்கிற காலத்துக்குச்செய்யத்தக்க கிருபையும், பாடுபட வேண்டிய காலத்துக்குப்படத்தக்க கிருபையும், சீவனிலே சீவனத்துக்குக்கிருபையும், சாவிலே சாகிறதற்குக்கிருபையும் அதினதின் காலத்திலே கிடைக்கும்படிக்கு விரும்புகிறதுதான். யூதர்கள் மன்னு என்கிற போசனத்தை அதிகமாய்ச்சேர்த்துக்கொள்ளாமல் அன்றன்றைக்குள்ளதே போதும் என்று இருந்தார்கள். வரும் நாளைக்காகக்கவலையோடே வைப்பார்களானுல், அது புழுவாகி நாறுமே. நீ உன் பயணத்திலே சேரவேண்டிய பட்டணத்துக்குச்சேராமுன்னே பெரிய நதியைக்கடக்க வேண்டுமென்று இருக்க, நீ அந்த நதிக்குச்சேரும்பொழுது, அங்கே ஒரு பரிசு ஆயத்தமாய் இருக்கிறது என்று அறிந்தால் போதாதா? அதை நீ இருக்கிற இடத்தில் கொண்டுவர வேண்டியதோ? அது தண்ணீர்க்கு வேண்டியதாய் இருக்க, கரை வழியிலே அதைக்கொண்டுவர வேண்டியது என்ன? அது அங்கே இருக்கிறது என்று நம்பாமல், இங்கே கொண்டுவரச்சொல்வதினுலே, அது பயணத்துக்குத்தடையாகிறது அல்லவோ? விசுவாசத்தினுலே நடக்கவேண்டும் என்று சொல்லியிருக்க, காணவேண்டுமென்று ஏன் சொல்லுகிறுய்?

III. கிறிஸ்தவன் அடையப்போகிற மரணம் மற்றவர்களுக்கு மிகவும் முக்கியமான பிரயோசனங்களை உண்டுபண்ணுகிறதாய் இருக்கின்றது. நமது இரட்சகர் பேதுருவுக்குச்சம்பவிக்கும் முடிவை அறிவிக்கும்பொழுது, யோவா. உக: ௰அ, ௰௯. "நீ இள வயது உள்ளவனுய் இருக்கையில், நீயே உன் அரையில் கச்சைகட்டிக்கொண்டு, உன் இஷ்டப்படிக்கு நடந்து திரிந்தாய். நீ முதிர்ந்த வயது உள்ளவனுய் இருக்கும்பொழுது, உன்

கைகளை நீட்டுவாய். மேலும், வேறொருவன் உன் அரையில் கச்சைகட்டி, உனக்கு இஷ்டம் இல்லாத இடத்துக்குக்கொண்டுபோவான் என்று, மெய்யாகவே உனக்குச்சொல்லுகிறேன் என்றார்.'' அவன் பராபரனுக்குப்புகழ் உண்டாகத்தக்கதாக அடையும் மரணத்தைக் குறித்து இப்படிச்சொன்னார். அவன் பலோத்காரமாய்ச்சிலுவை மரத்திலே அறையப்பட வேண்டும். சபையின் சரித்திரத்திலே சொல்லியிருக்கிறபடி, பேதுருவும், மற்றும் கிறிஸ்தவர்களும், சிலுவையிலே அறையப்பட்டதையும், வேறே விதமாய்த்துன்பப்பட்டதையும் கண்ட அநேகர் விசுவாசிக்க ஏவப்பட்டார்கள் என்று அறிகிறோம். இவர்கள் அவர்களுடைய சாந்தத்தையும், பொறுமையையும் கண்டு, அவர்களைத்துன்பப்படுத்தி, அவர்களைக்கொலைசெய்தவர்களுக்காகச்செய்த விண்ணப்பங்களையும் கேட்டுக்கொண்டு இருக்கும்பொழுது, துன்பப்படுத்தப்பட்டவர்களுடனே உடனாளிகளாகப் போனார்கள். இரத்தச்சாட்சிகளுடைய உதிரம் சபைகளுக்கு இவ்விதமாய் வித்தாய் இருந்தது என்கிற பழமொழியாய் இருக்கிறது.

எல்லாரும் சத்தியத்துக்காகச்சாக வேண்டும் என்று நியமிக்கப்பட்டது இல்லை. ஆனாலும், கிறிஸ்தவர்கள் எல்லாரும் தங்கள் சாவிலே பேதுரு, மற்றக்கிறிஸ்தவர்கள் சாட்சிகொடுத்ததுபோல நல்ல சாட்சிகொடுக்க வேண்டும். இது தங்களுக்குப்பிரயோசனம் உள்ளதாய் இருக்கிறது அல்லாமல், பராபரனுக்கு மகிமை வருவிக்கிறதாகவும் இருக்கும். சாவிலே மிகுந்த சந்தோஷமும், களிப்பும் இல்லாதே போனாலும், நோவிலே பொறுமையும், மனத்தாழ்மையோடே பராபரனுடைய சித்தத்துக்குக்கீழ்ப்படிதலும், சிலுவை மரத்தின் ஓரத்திலே மனந்திருப்புதலோடே நிற்குதலும், நம்முடைய அருமையுள்ள இரட்சகருடைய ஊழியத்தை மெய்ச்சுக்கொள்வதும் என்று, இவைகளைக்கொண்டு சாகிற சாவே பிரயோசனம் உள்ள சாவாம். சங்கீ. ௱கசு: ௰டு. "கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது. நீ உத்தமனை நோக்கிச்செம்மையானவனைப்பார்த்திரு. ஏனெனில், அம்மனிதனுடைய பிற்காரியம் சமாதானம்.''

ஆம், இந்தப்பிற்காரியம் முக்கியமாய்ப்பார்க்கத்தக்க தாய் இருக்கும். ஏனெனில், பரிசுத்தவானுடைய சாவு அநேகம் விசை பாவிக்கு வாழ்வு, இது விசுவாசிகளுக்கு எழுப்புதலும், ஒத்தாசையுமாய் இருக்கும். போதகர் போதித்த போதகத்துக்கு அவருடைய மரணம் நிச்சயத்தைக்கொடுக்கும். குருவானவர் தேவாலயத்திலே பிரசங்கித்ததை அப்பொழுது சபைகள் கவனத்தாழ்ச்சியாகக்கேட்டு இருந்தாலும் அவர் சமாதானத்தோடே மரிக்கிறதைப்பார்க்கும்பொழுது, அவர்களுக்கு நல்ல கவனத்தைக்கொடுக்கும் தகப்பன் சௌக்கிய காலத்திலே சொன்ன போதகத்தை எல்லாம் பிள்ளைகள் கேளாதிருந்தும் சாகுங்காலத்திலே கேட்பார்கள். உங்களில் ஒருவனுகிலும் நடுத்தீர்ப்புநாளிலே என்னைத்தரிசிக்கும்பொழுது, குணப்படாதவனுகக்காணப்படாதபடிக்குப்பார்க்கக்கடவன். அல்லாவிட்டால், தாவீது சாலோமோனைப்பார்த்துச்சொன்னதுபோல, அவனுக்குச்சொல்லப்படும். க நாளாக. உஅ: கூ. "என் குமாரனுகிய சாலோமோனே! நீ யுன் பிதாவின் பராபரனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தாலும், மனப்பூர்வத்தாலும் சேவி. ஏனென்றால, கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, சிந்தனைகளின் தோற்றுதலை எல்லாம் உணருகிறுர். நீ அவரைத்தேடிஞல் உனக்குத்தேன்படுவார். நீ அவரை விட்டுவிட்டாயே ஆகில் உன்னை என்றைக்கும் தள்ளிப்போடுவார்." சாகிறவள் தாயானவளாய் இருந்தால், அவளுடைய புத்திக்கு மகன் எதிர்த்து நிற்கலாமா? "ஆ, என் குமாரனே! ஆ, என் கர்ப்பத்தின் குமாரனே! ஆ, என் பொருத்தனைகளின் குமாரனே! நாம் இங்கேதானே ஒருவரையொருவர் விட்டு என்றைக்கும் பிரிந்து போகிறேமோ? புருஷன் பெண்சாதியால் எவ்வளவாய்ப்புத்திசொல்லப்பட்டாலும், அவள் எவ்வளவு அழகும், அன்பும் உள்ளவளாய் இருந்தும், அவள் சொன்ன புத்திகளைக்கேளாமற்போனுல், இறந்துபோனபின்பு அவள் சொன்ன புத்திகளை நினைத்துக்கொள்ளுவான். அவளை நினைக்கும்படிக்கு, ஒரு கல்லறையைக்கட்டுவிப்பான். அவள் நடந்த பாதையிலே முன் இவன் நடவாதிருந்தாலும், இப்பொழுது நடக்க வேண்டும் என்று ஆலோசிப்பான்.

சாகிறதற்கு ஏதுவாய் இருக்கிற கிறிஸ்தவனுக்குக்கிருபை அளிக்கப்பட்டு இருப்பதால், அவன் சாவது விநோதமும், பிரயோசனமும் உள்ளதாய் இருக்கும். இனத்தாருக்கும், சிநேகிதருக்கும் மாத்திரம் அல்ல. காண்கிற எல்லாருக்கும் அப்படியே பிரயோசனம் உள்ளதாய் இருக்கும். சாகிறவர்கள் அக்கணத்திலே அங்கே இருக்கிறவர்களை மிகுந்த கவலையோடே நோக்கிப்பார்ப்பார்கள். இலவுகீகக்கவலைகள் விட்டுப்போயிருக்கும் என்று எண்ணுவார்கள். அவர்களும் உத்தமமாய் இருந்து உண்மையாய்ப்பேசுவார்கள் என்றும், அவர்கள் சொல்பவைகளெல்லாம் நம்பப்படத்தக்கவைகள் என்றும் எண்ணுவார்கள். எல்லாம் முடிவுக்கு வந்தது. அவனுல் காணப்படுவதும், கேட்கப்படுவதும் இதுவே கடைசியான காரணம். இப்பொழுது, சம்பவிக்கப்போகிற சாவே முக்கியமான பிரசங்கம் அல்லது போதகம், அதுவெல்லாம் மாய்கை, இதுவெல்லாம் ஒழிந்துபோகின்றது. இப்பிரபஞ்சம் அழிந்துபோகின்றதென்று சொல்லுகிறது. ஆனுலும், அழிந்துபோகாத சுதந்தரத்தைப்பெற்றுக்கொண்டு இருக்கிறவனுமாய் மரணத்தின் பயங்கரத்துக்கு அஞ்சாத பராக்கிரம சாலியுமாய் நித்திரைகொள்ளப் போகிருன். புறம்பான மனிதத்துவம் அழிந்துபோனுலும், உள்ளான மனிதத்துவம் புதிதாக்கப்படுகின்றது. சிறுமையிற் கட்டப்பட்டு விடுதலையாக்கப்பட்டு இருக்கிருன். சாகிருன். ஆனுலும், இதோ பிழைக்கிருன். அவனுக்குச்சீவனும் உண்டு. அது அவனுக்குப்பரிபூரணமுமாய் இருக்கும். அக்கிரமக்காரருடைய வழி மிகுந்த துன்பமாய் இருக்கும். அவர்கள் இப்பொழுது வெட்கப்படுகிற காரியங்களை மெய்ச்சுக்கொள்வதும் இல்லை. இப்பிரபஞ்சத்தார் இப்பிரபஞ்சத்தைவிட்டுப்போகும்பொழுது அதைப்புகழார்கள். இவனே தான் நடந்த பரிசுத்தமான வழியை மெய்ச்சுக்கொள்ளுகிருன். தன்னுடைய எசமானனுக்கு உண்டான மேன்மையையும், நன்மையையும் குறித்து நல்ல சாட்சிகொடுக்கிருன். "கர்த்தாவே! உமது வார்த்தையின்படி உம்முடைய அடியானை நன்ருய் நடத்தினீர். கர்த்தர் நல்லவர் என்று அதை ருசித்துப்பாருங்கள். அவர்மேல் நம்பிக்கையாய் இருக்கிற மனிதன் பாக்கியவான். நல்ல போராட்டத்

தைப்பண்ணியிருக்கிறேன். ஓட்டைத்தை முடித்து இருக்கிறேன். விசுவாசத்தைக்காத்துக்கொண்டு இருக்கிறேன். இதுமுதல் நீதி யென்னும் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டு இருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளில் அதை எனக்கு மாத்திரம் அல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பின யாவருக்கும் தந்தருளுவார்'' என்று, இவ்விதமாய்ச்சாகிறவனுடைய வீடு பராபரனுடைய வீடும், மோட்சவாசலுமாய் இருக்கும். அந்த வீட்டிலே மரணம் சேயமாக விழுங்கப்பட்டதேன்கிற வசனம் நிறைவேறி இருக்கின்றது. அந்த வீட்டிலே மரணமே! உன் கூர்மை எங்கே? பிரேதக்குழியே! உன் சேயம் எங்கே என்கிற ஆர்ப்பரிப்புத்தூதர்களாலும் கேட்கப்படும். இவ்விதமான சாவு நீங்களுங்கூட வாருங்கள் என்கிறது. இவ்விதமான சாவு கவலையற்றவர்களுக்குக்கவலையையும், தள்ளாடுகிறவர்களுக்கு உறுதியையும், பயப்படுகிறவர்களுக்குத்தயிரியத்தையும், அறிவீனருக்கு அறிவையும் கொடுத்திருக்கும். இது பரிசுத்தமாய்ச்சீவிக்கிறதற்குச்சபையாரையும் பலப்படுத்தும். போதகர்கள் நன்ருய்ப்பிரசங்கம் பண்ணும்படிக்கும் வகையைக்காட்டும். அவபத்திக்காரர்களும் வெளியேபோய் ஆண்டவரே! நீதிமானுடைய சாவை நானும் அடையவும், அவனுக்கு உண்டான முடிவை நானும் பெற்றுக்கொள்ளவும் அருள்சேய்யும் என்று விண்ணப்பம் பண்ணுகிறதற்கு ஏதுவாய் இருக்கும்.

கிறிஸ்தவன் சடுதியாய்ச்சாவதைப்பற்றி இரண்டொரு வசனத்தைச்சோல்லுவோம். அவன் சடுதியாய்ச்சாவது, தனக்கு விரும்பப்படத்தக்கதாய் இருந்தாலும், மற்றவர்களுக்கு அதிக பிரயோசனமாய் இருக்கமாட்டாது. ஒரு கண்ணிமை நேரத்திலே இந்த லோகத்தைவிட்டுப் பராபரன் இடத்திற்குப்போய் இருப்பது சந்தோஷமான காரியந்தான். ஆனலும், அப்படிப்பட்ட சாவினலே மற்றவர்களுக்கு அறிவும், போதகமும் வாராது. கிறிஸ்தவன் தனக்கும் இவ்விதமான சாவு வரவேணும் என்று தேரிந்துகோள்ளவும் கூடாது. தாமதமாய்ச்சாகிறதினல் பராபரனுக்கு மகிமையும், மனிதருக்குப்பிரயோசனமும் வருமானல், என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படி ஆகட்டும் என்கிறதற்கு

இது போதுமே. எப்படியாகிலும், கடைசியிலே கதி கொடுக்கும் என்கிற நம்பிக்கை திருத்தியைக்கொடுக்கிறது.

கிறிஸ்தவர்களே! நீங்கள் பிழைக்கிற பிழைப்பினுல் மாத்திரம் அல்ல, சாவும் சாவினுலும் கர்த்தருக்கு மகிமை வரும்படியாகக்கவலைப்பட வேண்டும் என்று உங்களுக்குப்புத்தி சொல்லுகிறேம். நம்முடைய இரட்சகருடைய ஆளுகை இவ்விரண்டுக்கும் ஏற்கும். "நம்மில் யாவனும் தனக்காகப்பிழைக்கிறதும் இல்லை. யாவனும் தனக்காக மரிக்கிறதும் இல்லையே. நாம் பிழைக்கிறது கர்த்தருக்காகப்பிழைக்கிறேம். மரிக்கிறது கர்த்தருக்காக மரிக்கிறேம். ஆகையால், நாம் பிழைத்தாலும், மரித்தாலும் கர்த்தருடையவர்களாயே இருப்போம். அதற்காகக்கிறிஸ்துவும் மரித்தோர்மேலும், சீவனுள்ளோர்மேலும் ஆண்டவராய் இருக்கும் பொருட்டாக மரித்தும், எழுந்தும், உயிர் அடைந்தும் இருக்கிறுர். யாக்கோபு என்பவனும் மரணகாலத்தில் விசுவாசத்தினுலே, யோசேப்பினுடைய குமாரர் இருவரையும், ஆசீர்வதித்துத்தன் கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான்." ஒருவன் சொன்னதாவது; என்னை விசாரிக்க வந்தவர்கள் என்னைப்பார்க்க வரட்டும். நான் உயிரோடே மற்றவர்களுக்கு முன்மாதிரியாய் இருக்கிறதுபோல, சாவிலும் அப்படியே இருக்கவேண்டும் என்பதே. சிம்சோன் என்பவனும், சாகிறதற்கு ஏதுவாய் இருக்கும்பொழுது, தேவனை நோக்கி இந்த ஒரேவிசை என்னைப்பலப்படுத்த வேண்டும் என்று விண்ணப்பம் பண்ணிஞன். நீங்களும் இந்தப்பூலோகத்திலே நன்மை செய்வதற்கு இதுவே கடைசியான சமயமாம். ஒரேவிசை மாத்திரம் நீங்கள் உங்கள் சமுசாரத்துக்காகவும், சபைக்காகவும், பூலோகத்துக்காகவும் சாகக்கூடும். ஆகையால், அந்தச்சாவு உங்களுடைய இரட்சகராகிய தேவனுடைய சன்மார்க்கத்துக்கு, எல்லாவிதத்திலும் அலங்காரமாய் இருக்கிறதற்கு மிகுந்த கவலையோடே ஆசைப்படுங்கள்.

VI. அது முடிவிலே மிகுந்த சவுக்கியமும், மகிமையும் உள்ளதாய் இருக்கின்றது. கிறிஸ்தவனுடைய சாவு வருத்தத்தோடும், சந்தேகத்தோடும் வந்தாலும், எப்

படியாகிலும் நன்மையாய் முடியும். கிறிஸ்தவர்கள் தங்கள் சாவிலே சமாதானத்தையும், சந்தோஷத்தையும் அநுபவிக்கக்கூடாத சமயங்கள் இரண்டு வகையாம்.

முதலாம் வகை என்னவென்றல், தான் சுவிசேஷத்தின் ஒழுங்குப்படி நடவாததற்காகத்தேவதண்டனையை அடைவது தான். பொல்லாப்பைப்பார்க்கமாட்டாத சுத்தக்கண்கள் உள்ள தேவன் சொல்லுகிறதாவது; சங். அகூ: ௩௰—௩௨. "அவன் குமாரர் நம்முடைய நியாயங்களில் நடவாமல், நம்முடைய வேதத்தைவிட்டு நம்முடைய கற்பனைகளைக்கைக்கொள்ளாமல், நம்முடைய பிரமாணங்களைக்குலைத்துப்போட்டால், அவர்கள் மீறுதல்களை மிலாறுகளாலும், அவர்கள் அக்கிரமத்தை வாதைகளாலும் விசாரிப்போம். ஆனல், நம்முடைய கிருபையை அவனைவிட்டு விலக்காமலும், நம்முடைய உண்மையிலே பிசகாமலும் இருப்போம்" என்பதே. அவர் இப்படித்தண்டிப்பது பகையினலே அல்ல, ஆயாசத்தினலே. இந்த ஆயாசத்தினலே வருகிற தண்டனைக்குச்சிநேகமே காரணம். இதற்குத்திருஷ்டாந்தமாக, வெளி. ௩: ௰௯. "என்னலே சிநேகிக்கப்படுகிறவர்கள் எவர்களோ அவர்களைக்கடிந்துகொண்டு தண்டிக்கிறேன்" என்கிறர். சிலகாலங்களில் கடைசியிலே கண்டித்துத் தண்டிக்கிறர். "அவர் தம்முடைய முகத்தை மறைக்கத்திகைக்கிறர்கள். அவர்களுடைய சூரியனும் மேகத்தோடே மறைந்துபோகின்றது. அல்லது, அவனுடைய மனதில் சந்தேகமென்னும் இருள் இருக்கலாம். என்றேன்றைக்கும் கோபத்தை வையார்." இவ்விதமாய் அவர்கள் பராபரனலே தண்டிக்கப்பட்டாலும், உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாய்த்தீர்க்கப்பட மாட்டார்கள். இவ்விடத்திலே அவருடைய பலத்த கையினலே அவர்களைத்தாழ்த்தினலும், தகுந்த காலத்திலே அவர்களை என்றேன்றைக்கும் உயர்த்தப்பட்டவர்களாய் இருக்கச்செய்வார்.

இரண்டாம் வகை என்னவென்றல், சுபாவத்தினலாவது, வியாதியினலாவது வருகிற ஐயமும், ஏமாறுதலுந் தான் இப்படிப்பட்ட பயங்கரமான சாவிலே காவுப்பர் என்பவரும் இறந்தார். அவருடைய சாவு இப்படி இருந்தும், அவருடைய முடிவு நன்றய் இருந்தது. அ

வர்களுக்கு உண்டான ஏமாறுதல் சீவனுள்ள விருட்சத்தின் கனியைச்சாப்பிடாதபடிக்குத்தடைசெய்ததில்லே. அவர்கள் தங்களை ஆக்கினைக்குட்படுத்தினார்கள். பராபரனே அவர்கள்மேல் பிரியப்பட்டார். அவர்களுக்கும் சாவு எவ்வளவு ஆதாயம். அவர்கள் மன ஆயாசம் ஒரு கண்ணிமை நேரத்திலே களிப்பான பிரமிப்புக்காக மாற்றப்பட்டு இருந்தது. வேதனையிலே தாங்கள் விழித்துக்கொண்டு இருப்போமேன்று எண்ணி இறந்தார்கள். ஆனாலோ, அவர்கள் விழித்திருக்கும்போழுது, ஆபிரகாமுடைய மடியிலே இருக்கிறோம் என்று கண்டார்கள். மன மயக்கத்தோடே பூலோகத்தை விட்டார்கள். நித்திய சந்தோஷம் என்னும் பிரகாசமான வெயிலிலே நித்திரை தெளிந்தார்கள். சிநேகிதரே! அவபத்தியானவன் தன்னை வஞ்சித்த வஞ்சனைக்கும், இப்படிப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு நேரிட்டு இருக்கிற ஏமாறலுக்கும் வித்தியாசத்தைப்பாருங்கள். தேவபத்தியில்லாத அவபத்திக்காரனான ஆப்ஷ்துரை என்னுடைய சரீரத்தைத்தூசுக்கும், என்னுடைய ஆத்துமாவை மகத்துவமுள்ள எவருக்கோ ஒருவருக்கும் ஒப்புவிக்கிறேன் என்றும்,இப்போழுது இருட்டோடே எங்கேயோ பாய்ந்துபோகிறேன் என்றும் தான் சாகும் காலத்திலே சோன்னான். இப்படிப்பட்டவர்கள் இருட்டோடே பாய்ந்துபோவது மாத்திரம் அல்ல, இருட்டுக்குள்ளும் பாய்ந்துபோகிறார்கள். அறிவீனம், சந்தேகம், நம்பிக்கையீனம் என்றிவைகளின் இருட்டில் நின்று என்றேன்றைக்குமுள்ள கார் இருளிலே பாய்ந்துபோகிறார்கள். இப்படிப்பட்டவர்களுடைய முடிவுக்கும், கிறிஸ்தவனுடைய முடிவுக்கும் அளவில்லாத வித்தியாசம் உண்டு. கிறிஸ்தவன் எடுக்கிற கடைசியான காலடி இருட்டோடே எடுத்து நடந்தாலும், உடனே பகலிலே பிரவேசிக்கிறான். அவ்விடத்திலே அவனைப்பற்றிச்சோல்லப்படுவது என்னவென்றால், உன் சூரியன் அஸ்தமிப்பதும் இல்லே. உன் சந்திரன் மறைவதும் இல்லே. ஏனெனில், கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாய் இருப்பார். உன் துக்கநாள்கள்முடிந்திருக்கும் என்பதே.

ஆகையால், எவ்விதமாய்ச்சேத்தாலும் முடிவிலே ஆசீர்வதிக்கப்படுவான். அவனுடைய சாவுநாள் அவ

னுடைய பிறப்புநாளைப்பார்க்கிலும் அதிக உத்தமமாய் இருக்கும். இளைப்படைந்த வழிப்போக்கன் வீட்டிற் சேர்ந்த நாளைப்போலவும், அலைகளால் உபாதிக்கப்பட்ட கப்பற்காரன் விரும்பின துறையைச்சேர்ந்த நாளைப்போல வும், நெடுநாள் உபாதிக்கப்பட்ட வியாதிக்காரன் குறை யற்ற சுகத்தையடைந்த நாளைப்போலவும் இருக்குமே. இப்பொழுது, அழியாமையுள்ள சுதந்தரத்தைச்சுதந்தரிக் கப்போகிற சுதந்தரவாளியைப்போல, ஒளியில் இருக்கிற பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தை அடைந்துகொள் ளப்போகிறன். ஆகையால், அவனுடைய சாவு எவ் விதமானதாய் இருந்தாலும், அந்தச்சாவே அவனுக்கு ஆதாயம் வருவிக்கிறதாய் இருக்கும். சாவினல் அவ னுக்கு வருகிற ஆதாயம் இவ்வளவு என்று ஆராலே சொல்லக்கூடும். தீமைகளை நீக்குவதினலும், வாசஸ் தலத்தைச்சேர்வதினலும், சற்குணரோடே சம்பந்தப் பட்டு இருப்பதினலும், அறிவு, பரிசுத்தம், சந்தோஷம் என்ற இவைகளைப்பெற்றுக்கொள்வதினலும் கிடைக் கப்படும் சந்தோஷம் மனிதர் வாயால் சொல்லக்கூடு மோ? இச்சீவனுக்கு அடுத்த சகல தீமைகளையும் அ வன் கண் பாராமற் போகும்நாளிலே இனி எந்தத்தீமை களையும் அவன் கண் காணப்போகிறதில்லை. தீட்டுப் பட்ட இவ்வுலகத்தை அவன் விட்டுப்போகும்பொழுது, இதைப்பார்க்கிலும் வேறொரு நல்லதேசம் அவனுக்காக ஆயத்தப்படுத்தப்பட்டு இருக்கின்றது. பூமிக்கு உரிய கூ டாரம்போன்ற வீடு இடிந்துபோகும்பொழுது, பரமண்ட லங்களிலே கையாற்செய்யப்படாமல் தேவனல் உண் டாக்கப்பட்ட நித்தியமான வீடாகிய வாசஸ்தலம் அ வனுக்கு உண்டு. பாவமுள்ள இந்த உலகத்தையும், குறைவுள்ள இந்தச்சபையையும் அவன் விட்டுப்போ கும்பொழுது, அநேகம் பதினயிரமாகிய தூதர்களின் விசேஷமான சங்கத்தின் இடத்திற்கும், நிறைந்த பாக் கியமுள்ளவர்களாகிய நீதிமான்களின் ஆவிகளின் இடத் திற்கும், முதன்மை உள்ளவர்களின் சபையினிடத் திற்கும் சேருகிறவனவான். இப்பொழுது, கண்ணடி யிலே நிழலாய்ப்பார்க்கிறன். அப்பொழுது, முகமுக மாகவே பார்ப்பான். இப்பொழுது, அவன் நன்மை செய்யத்தீவரிக்கும்பொழுது தீமை நேரிட்டிருக்கிறது.

சிலவேளை பராபரனால் உண்டாகும் ஆறுதல்களும் அற்பமாய்ப்போகின்றன. அப்பொழுது, அவன் வழுவாதபடிக்கு, மாசில்லாமல் மகிழ்ச்சியோடே பராபரன் தம்முடைய மகிமையுள்ள சந்நிதானத்திலே நிறுத்துகிறார். இனிமேல் இன்னவின்ன விதமாய் இருப்போம் என்று இன்னம் வெளியரங்கமாகவில்லை. ஆனால், நிறைவானது வரும்பொழுது, குறைவானது ஒழிந்துபோய்விட்டிருக்கும்.

க. மரணத்தாலே செல்வமும்
அளவில்லாத மேன்மையும்
எனக்குண்டாம் அதனாலே நான்
மரிக்கும்போதே மோட்சவான்.

உ. அப்போது சேர்ந்த ஆத்துமம்
தூதர்களோடே பாக்கியம்
நிறைந்த பரதீசிலே
களிக்கும் என்றும் கர்த்தரே.

௩. அதனால் நல்லாறுதல் உண்டே
அக்கணம் எனதாவிக்கே
கர்த்தாவைக்காணும் மேன்மையும்
இன்பமும் சொந்தமாகவும்.

௪. என் ஆவியில் அப்புறம்
ஸ்தோத்திரத்தைக்கேட்கிற
நான் இந்த லோகத்தை இனி
இச்சித்துக்கொள்வதெப்படி.

ரு. விரும்பப்பட்ட சீவனே
என் ஆவி நாடும் செல்வமே
உம்மால் எப்பொழுதும் பூரிப்பேன்
எப்போதும் இங்கே வாழுவேன்.

இப்படிப்பட்ட பாக்கியத்தை அடைந்து இருக்கிறவர்களுக்காக நீங்கள் துக்கத்தைக்காட்ட வேண்டுமோ?

உங்கள் சிநேகிதருக்கு நீங்கள் காட்டும் பட்சம் இதுவா? நீங்கள் அவர்களைச்சிநேகித்தால் அவர்கள் தங்கள் பிதாவண்டைக்குப்போய் இருக்கிறார்கள் என்று சந்தோஷப்படாமல் இருப்பீர்களா? அவர்கள மகா மேன்மையான மகிமையுள்ள இடத்தில் இருந்து, நீங்கள் உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்று சொல்லுவார்கள் அல்லவோ? வெற்றிசிறந்து இருக்கிற எங்களுக்கல்ல, போராடுகிற தலத்திலிருக்கிற உங்களுக்கே இந்த அழுகை தகும். சரீரச்சுமை நீக்கப்பட்டிருக்கிற எங்களுக்கல்ல, இன்னம் சரீரத்திலே குடிகோண்டிருக்கிற உங்களுக்கே, காலையிலே கவலையினாலே உபாதிக்கப்பட எழுந்திருக்கிற உங்களுக்கே, திகிலினாலே பயப்படுகிற உங்களுக்கே, எந்தக்கேடுகளாலும் விசனப்படுகிற உங்களுக்கே, பலவீனங்களாலும் நொறுக்கப்படுகிற உங்களுக்கே இந்தப்புலம்பல் தகும். கர்த்தரோடிருக்கிற எங்களுக்கோ இது தகாதென்பார்கள்.

ஆ, என் சகோதரர்களே! இவையெல்லாம் மெய்யாய் இருக்கக்கர்த்தர் நமக்குச்செய்கிற எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்குத்தோத்திரம் செலுத்த மிகவும் கடனாளிகளாய் இருக்கிறோம். அவர் தயவுள்ளவர் என்கிற சாட்சிகளை எத்திக்கிலும் பார்க்கிறோம். பூமி அவருடைய பரிபூரண நன்மைகளினாலே நிறைந்திருக்கின்றது. வருஷத்தைத்தம்முடைய நன்மைகளினாலே முடி சூட்டுகிறார். அவர் நம்மை நாடோறுந் தம்முடைய நன்மைகளினாலே ஆதரிக்கிறார். கடைசியிலே இவைகளோடே நித்திய அழிவும் வந்திருக்குமானால், இவையெல்லாம் நமக்கு என்னவாயிருக்கும். நமது சிறுமையிலே நம்மை நினைத்தவரார்? நமக்கு வரவேண்டிய சாபத்தை ஆசீர்வாதமாக மாற்றினவரார்? நரகத்துக்குப் போகிற சாலையை நித்திய சீவனுக்குப்போகிற வாசலாகச்செய்தவரார்? நம்மைக்கொள்ளையிட்டுக்கெடுத்து வந்த பசாசு நம்மை ஐசுவரியவான்களாக்குகிறதற்குச்செய்தவரார்? இவையெல்லாம் நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் மத்தியஸ்தமூலமாய் அல்லவோ. இதுதான் இரகசியமான சிநேக அற்புதம். ஐசுவரியமுள்ள இவர் நமக்காகத்தரித்திரனாகாவிட்டால், எளியவர்களாகிய நாம்

ஒருபோதும், ஐசுவரியவான்களாகக்கூடாது. பிள்ளைகள் மாம்ச இரத்த தேகமுள்ளவர்களாய் இருப்பதினாலே, அவர்களைப்போல அவரும் மாம்ச இரத்ததேகமுள்ளவரானார். அவர் தம்முடைய சரீரத்திலே நம்முடைய பாவங்களைத்தாங்கிக்கொண்டு, அவைகளைச்சிலுவை மரத்திலே நிவிர்த்தி செய்தார். அவர் மரணத்தை நிவிர்த்தி செய்து, தமது சுவிசேஷத்தினாலே சீவனையும், அழியாமையையும் தெரியப்படுத்தினார். ஆகையால், அவர் சொல்வது ஒருவன் என் வார்த்தைகளைக்கைக்கொண்டால், மரணத்தைப்பார்க்கவேமாட்டான் என்கிறார். அவன் அந்த மரணவழியே போகவேண்டியது தான். ஆனாலும், மரணத்தின் கசப்பெல்லாம் நீக்கப்பட்டது. அவனுக்கு அந்நேரத்திலே நேரிட்டிருக்கிறதென்னவென்றால், இயேசுவிலே நித்திரைகொள்ளுகிறதும், தனது ஓட்டத்தைச்சந்தோஷத்தோடே முடிக்கிறதும், கிறிஸ்துவோடே இருக்கப்போகிறதுந்தான்.

இதை வாசிக்கிற என பிரியமானவர்களே! இவ்விதமாய் உங்களுக்குள்ளும் முடியுமோ? இப்படியே விசாரிக்கிறது வீணென்றும், அதற்குத்தகுந்த மறுமொழி சொல்லப்படக்கூடாதென்றும நினையாதிருங்கள். இக்காரியத்திலே அநேகர் தங்கள் அறிவீனத்தையும், பொல்லாத தயிரியத்தையும் காட்டுவார்கள். மரணம் விரும்பப்படத்தக்கதென்று சொன்னாலும், தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற கண்டிப்புக்குட்படத்தக்கவர்களாயிருப்பார்கள். “கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்களுக்கு ஐயோ, கர்த்தருடைய நாள் உங்களுக்கு ஏனவேண்டும்? அது வெளிச்சமாயிராமல், அந்தகாரமாயிருக்கும். ஒருத்தன சிங்கத்திற்குத்தப்பினபோது, கரடி யவனைச்சந்திக்கிறதுபோலேயும், அல்லது வீட்டுக்குள்ளே வந்து தன்கையைச் சுவரின்மேற்போடுகிறபோது, பாம்பு அவனைக்கடிக்கிறது போலேயும் இருக்கும். கர்த்தருடைய நாள் வெளிச்சமாய் இராமல் இருளும் பிரகாசமற்ற அந்தகாரமுமாய் இராதோ?” உங்களிற் சிலர் நான் சாக விரும்புகிறேன் என்கிறபொழுது, ஆக்கினைக்குட்பட விரும்புகிறதுதான் அல்லவோ, மரணத்திற்கு எவ்வளவு சமீபமாய்இருக்கிறீர்களோ, நரகத்திற்கும் அவ்வளவு சமீபமாய் இருக்கிறீர்கள். அது நிசமாய் இருப்பதால், இதுவும் நிசமாய்

இருக்குமே. வஞ்சிக்கப்படாதிருங்கள். உங்களுக்கு இப்பொழுது எத்தனை குறைவுகளும், வருத்தங்களும் இருந்தாலும், நீங்கள் இச்சீவனை விட்டுச்சாகிறது நலம் அல்ல, நீங்கள் இந்த இலவுகீக வருத்தங்களுக்காக முறையிட்டாலும், இப்பொழுது உங்களுக்கு உண்டாகும் வியாகுலங்கள், இனிவரும் வியாகுலங்களுக்குத்துவக்கமாய் இருக்கும். அவர்கள் நித்திய அழுதலுக்கும், புலம்பலுக்கும் அச்சாரமாய் இருக்கும். வானத்திலிருந்துண்டான ஒரு சத்தம் சொல்வது என்னவென்றால், "கர்த்தரிடத்தில் சாகிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது" என்கின்றது. இவர்கள் மாத்திரமே பாக்கியவான்கள். மற்றவர்கள் அல்ல, கர்த்தருக்குள் இராதவர்களோ பாக்கியவான்கள் அல்ல. அவர்கள் கிருபையின் கீழ் இராதவர்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருப்பதினாலே சாபத்துக்குக்கீழாய் இருக்கிறார்கள். அவர்களை நீதிமான்களாக்கும்படியாக அவருடைய நீதி அவர்களுடையதல்ல. அவர்களைச்சுத்திகரிக்கிறதற்கும், அவருடைய ஆவியும் அவர்களுக்குரியதல்ல. மகிமையென்னும் சுதந்தரம் தங்களுக்குரியதென்றுகாட்டும்படிக்கான பத்திரம் என்னப்பட்ட சீட்டு அவர்களுக்குரியதும் அல்ல, அதற்கு அவர்கள் உகந்தவர்களும் அல்லப்பரிசுத்த மண்டலத்திலிருக்கிற ஆராதனைக்கும் சந்தோஷங்களுக்கும் அவர்கள் பழகினதும் இல்லை.

இப்பொழுது கிறிஸ்தவனுடைய நடக்கையும், முடிவும் எப்படி என்று பார்த்துச்சொன்னோம். இனிக்குணப்படாத பொல்லாதவர்களுடைய நடக்கையும், முடிவும் எப்படி என்று பார்ப்போமாக. நாம் இதைப் பார்க்கவேண்டிய முகாந்தரம் என்னவென்றால், அந்த முடிவு நமக்கு வராதபடிக்குத்தானே. ஆகையால், பயத்தோடே அவர்களை இரட்சிக்கவேணும் என்று பிரயாசப்பட்டு, பராபரனுடைய பயங்கரத்தை அறிந்து, அவர்களுக்குப்புத்தி சொல்லுகிறோம். அப்போஸ்தலனாகிய பேதுருவும் உங்களுக்குப்புத்தி சொல்லுகிறார். (பராபரனுடைய சுவிசேஷத்துக்குக்கீழ்ப்படியாதவர்களுடைய முடிவு எப்படி இருக்கும்!) "ஆண்டவர் அவனை நகைக்கிறார். ஏனெனில், அவன் நாள் வருகிறது

என்று காண்கிறார். இன்னம் கொஞ்சம் நேரந்தான். அப்பொழுது ஆகாதவன் இரான். அவன் தானத்தை உற்று விசாரித்தாயானால், அவன் இல்லை. வாழ்வை அறியும்படிக்கு யோசித்தேன். ஆனால், நான் பராபரனுடைய பரிசுத்த ஸ்தலங்களுக்குட்பிரவேசித்து, அவர்கள் கடைசிக்காரியத்தைக்கவனித்து உணருமளவும், அது என் பார்வைக்கு விதனமாய் இருந்தது. சறுக்கல்களிலே அவர்களை நிறுத்தி, அவர்களைப்பாழ்க்கடிப்புகளில் விழப்பண்ணுகிறீர். ஓர் நிமிஷத்தில் எத்தனையாய்ப்பாழாவார்கள். பயங்கரங்களாலே அழிந்து நிர்மூலமாவார்கள். ஆண்டவரே! நித்திரை தெளிந்த உடனே சொப்பனம் ஒழியுமாப்போலே அவர்கள் வேஷத்தைப்பட்டணத்தில் ஈனமாய்ப்போகப்பண்ணுவீர்.''

பாவியானவன் சென்ற காலத்தைப்பின்னிட்டுப் பார்க்கிறானே? ஆ, எத்தனையான மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான். ஆ, எத்தனையான மாயை. எல்லாம் மாயையே. தான் வாழ்ந்துகொண்டு இருக்கிற சீவன நாள் எல்லாம் வஞ்சனைகளாலும், சொப்பனங்களாலும், மாயையாலும் நிறைந்து இருக்கின்றது. தான் செய்த பாவங்கள் தவிர வேறொன்றும் நிசமாகக்காணப்படாது. செபத்தியானத்தைத்தான் விட்டு விட்டதும், பராபரனை மறந்து விட்டதும், அவருடைய பரிசுத்த நாளை ஆசரிக்காமல் விட்டதும், அவருடைய வசனங்களையும், கற்பனைகளையும் அசட்டை பண்ணினதும் என்று இவைகள் யாவும் உண்மையானவைகள் என்று காணப்பட்டு, இவைகள் அவன் மடியில் இருந்து, தேள்களைப் போலக்கொட்டுகின்றன. சாகுங்காலத்திலே அவனுக்கு நிகழ்காரியங்களுக்கு உரியவைகள் என்ன ஆறுதலைக்கொடுக்கும் புறம்பான காரியங்கள் எவ்வளவு சந்தோஷத்தைக்கொடுக்கக்கூடியவைகளாய் இருந்தாலும், உள்ளாகக்காயப்பட்ட மனச்சாட்சி இருக்கிறபடியினாலே, என்ன சந்தோஷம் உண்டாய் இருக்கும். நீதியானது மரணத்தில் நின்று நீக்கும். செல்வமானது கோபாக்கினை நாளில் ஒன்றுக்கும் உதவாததுதான். இன்னம் சில நாளைக்குள்ளே புழுவுக்கு இரையாவேன் என்று எண்ணுகிறவனுக்குக்கனம் ஏது! புகழும் ஏது? மெய்ச்சுக்கொள்ளும் வார்த்தைகள் சாகிறவன் மனதுக்கு அமைதலைக்

கொடுக்குமோ? நாம் இராத இடத்தில் பேசிக்கொள் ளப்படுகிற புகழ் நாம் இருக்கிற இடத்தில் அநுபவிக் கிற துன்பத்தை நீக்கிவிடுமோ? நரகர் சொல்லும் இகழ்ச்சிக்கு ஈடாக நரர் பாடும் புகழ்ச்சி ஒக்குமோ?

வருங்காலம் எதைக்கொடுக்கும்? வருங்காலத்திலே தான் விரும்புகிறவை எல்லாவற்றையும் விட்டுத்தனக் கு நம்பிக்கை வராததும், விரும்பிக்கொள்ளாததும், தப் பித்துக்கொள்ளக்கூடாததுமான அந்த நிலைமையிலே போகிறன். அந்தச்சீர் மனதுக்கு எதின் மூலமாக என் கிலும் சந்தோஷத்தைக்கொடுக்கக்கூடுமோ? சிநேகத்தை விரும்புவான். ஆனல் அங்கே ஆத்துமாக்கள் இருந்தா லும் சிநேகம் இல்லை. தடைபடாத பகை அங்கே இருக்கும். இரக்கம் இல்லாத தண்டனை இருக்கும். முடிவு இல்லாத வியாகுலம் இருக்கும். அவருடைய கோபத்தின் பெலனையும், அவருடைய சினத்தையும், அவருக்குப்பயப்படத்தக்கவிதமாய் அறிந்துகொள்ளுகிற வனர்? ஆ, சீவன் உள்ள தேவனுடைய கையில் விழு கிறது எவ்வளவு பயங்கரமான காரியம்? அக்கிரமக் காரன் தன் அக்கிரமத்திலே துரத்தப்படுவான். அவன் வெளிச்சத்தில் இருந்து, இருளிலே துரத்தி விடப்பட்டு, பூலோகத்தில் இருந்து தள்ளுண்டு போவான். அல்ல வென்றல், அவன் ஒரு ஆட்டுக்குட்டியைப்போலச்சேத் துவிட்டாலும், அதற்குப்பின் அவனுக்கு ஏமாறுதல் வா ராதோ?

ஆ, குணப்படாதவர்களே! நீங்கள் ஞானம் உள்ளவர் களாய் இருந்து, இதைச்சிந்தித்து, உணர்ந்துகொள்ளுவீர் களாகில், உங்களுக்கு நலமாய் இருக்கும். இந்த நித்திய நரக ஆக்கினைக்குத்தப்பித்துக்கொள்ளும் வரைக்கும் உங் கள் கண்ணிமைகளுக்கு உறக்கம் கொடாமல் இருப்பீர் களே. ஆனல் நீங்கள் முடிவு சமீபமாய் இருக்கிறது இல்லை என்று சொல்லி, தீமையான நாளை அகலத்துரத்து கிறீர்கள். ஆனல் நீங்கள் அதை முழுவதும் அகற்றக் கூடுமோ? அல்லது தூரத்திலாவது அகற்றக்கூடுமோ? நீங்கள் எத்தனை நாள் பிழைத்து இருப்பீர்கள் என்று தெரியுமா? அந்த நாள் இன்ன நாள் என்று சொல்லு வீர்களா? எழுபது வருஷம் ஆனலும், எண்பது வரு ஷம் ஆனலும் சீக்கிரமாய்க்கடந்து, அறுப்புண்டு பறந்து

போகிறீர்கள். எங்கே அதற்குப்பின் எவ்விதமாய் இருப்பீர்கள்! ஆனால், நீங்கள் எண்பது வயது உள்ளவர்கள் ஆவீர்கள் என்பதற்கு எவ்வளவு சந்தேகம்?

சென்றே எறிப வொருகால் சிறுவரை
நின்றே எறிப பறையினை நன்றே காண்
முக்காலைக்கொட்டினுண் மூடித்தீக்கொண்டெழுவர்
செத்தாரைச்சாவார் சுமந்து.

நீ மரணத்துக்குத்தப்பிப்போகலாம் என்கிறதற்கு என்ன நம்பிக்கை வைத்து இருக்கிறாய். உன் வாலிபமோ? உன் செல்வமோ? உன் சவுக்கியமோ? இதுவெல்லாம் மாயை. புகையைப்போலப்பறந்து போய் விடும் அல்லவோ? மிகுந்த சவுக்கியமான நிலைவரத்திலும் கூட மனிதர் மாயையாய் இருக்கிறார்கள். நம்முடைய விசுவாசத்தைக்கொண்டு இருக்கிற எங்களுடைய தேவனே. "நாங்கள் ஞானம் உள்ள இருதயத்தைத்தரித்துக்கொள்ளும்படியாக எங்கள் நாள்களை எண்ணும் அறிவை எங்களுக்குக்கட்டளையிடும்." பிரியமானவர்களே! இந்த அறிவு எதுக்கு ஏதுவாய் இருக்கும் என்று கேட்க, அப்போஸ்தலர் சொன்னதுபோல, நாமும் சொல்லுவோமாக. "நாம் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுய நீதியை அல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே வருகிறதுமாய், விசுவாசமூலமாய்ப்பராபரனால் வருகிறதுமாய் இருக்கிற நீதியை உடையவனாய் இருந்து, இப்படிக் கிறிஸ்துவுக்கு உள்ளிருக்கிறவர்களாய்க்காணப்படும்படிக்கும் சகலத்தையும் குப்பையைப்போல எண்ணி இருப்போம். இப்படி நாம் அவரையும், அவர் உயிரோடு எழுப்புதலின பலத்தையும், அவருடைய பாடுகளோடே ஐக்கத்தையும் அறிந்து இருக்கிறதும் அல்லாமல், எப்படியும் நாமும் மரித்தோரில் இருந்து, உயிரோடு எழுந்து இருப்பதற்குத்தகுதியாகும்படிக்கு அவருடைய மரணத்திற்கு ஒப்பான மரணத்திற்கு ஏதுவாய் இருப்போம். நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய கிருபை உங்கள் எல்லாரோடும் கூட இருக்கக்கடவது. பூர்வீககாலங்களில் மறைவாய் இருந்து இப்பொழுது

தீர்க்கதரிசன ஆகமங்களினுலே அநாதியான பராபரனு டைய கட்டளையின்படி வெளியரங்கமாக்கப்பட்டது மாய், விசுவாசத்திற்குக்கீழ்ப்படியும்படிக்கு எல்லாத் தேசத்தாருக்கும் அறிவிக்கப்பட்டதுமாய் இருக்கிற இர கசியத்தை வெளிப்படுத்துகிறதாயும், இயேசுக்கிறிஸ்துவி னுடைய பிரசங்கமாயும் இருக்கிற சுவிசேஷத்தினபடி யே உங்களை ஸ்திரப்படுத்துதற்கு வல்லவருமாய், ஒருவ ருமாய், ஞானமுள்ளவருமாய் இருக்கிற பராபரனுக்கு இயேசுக்கிறிஸ்து மூலமாய் என்றென்றைக்கும் புகழ்ச்சி உண்டாவதாக. என்னுடைய அன்பு கிறிஸ்து இயேசு வைப்பற்றிக்கொள்ளுகிற உங்கள் எல்லாரோடும் கூட இருக்கின்றது—ஆமன்.”

முற்றிற்று.

3 2044 011 280 534